இப்போதே ஏதாவது செய்தாக வேண்டும் என்கிற துடிப்பு எல்லோரிடமும் இருக்க வேண்டும்" என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

ஆதி திராவிட மக்களின் அறியாமையைப் போக்கி, அறிவைப் புகட்டி, ஆதரிப்பவர் அம்மா அவர்கள். உயர்ந்த வாழ்வு அளிப்பவர், மக்கள் போற்றும் மாசறு காவியம், மனித சக்தி கடந்த மகா சக்தி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி, அவர்களை முன்னேற்ற நடவடிக்கைகள் எடுப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாணவப் பருவத்திலே விடுதி வாழ்க்கை என்பது அனைவருக்கும் கிடைக்காது. ஒழுக்கம், சுய சிந்தனை, கட்டுப்பாட்டுடன்கூடிய விடுதி வாழ்க்கை பலரையும் பண்படுத்தியிருக்கிறது. ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளை மேம்படுத்த, சீரமைக்க இன்றைக்கு சிறப்பான அறிவிப்புகள்.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட, ஆதி திராவிட மக்கள் வாழ்வு சிறக்க எண்ணில் அடங்கா அறிவிப்புகளைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, ஆதி திராவிட மக்களின் ஆதரவாளராய், பிற்படுத்தப்பட்ட மக்களின் பாதுகாவலராய், (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகளின் மாணிக்கமாய்த் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, உறுப்பினர்களின் நன்றியோடு என்னுடைய நன்றியையும் இணைத்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு மேலாக

கருணை அடிப்படையில் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்து இருந்த 394 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கியிருக்கிறார்கள். உண்மையில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பணியில் இருக்கிறபோது தன்னுடைய தந்தை, தாயை இழந்து 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வாரிசுகள் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பில் அலைந்து கொண்டிருந்தார்கள்.

கடந்த ஆட்சியின்போது. நானும், மறைந்த எங்களுடைய அருமைத் தலைவர் திரு. என். வரதராஜன் அவர்களும் அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்களைச் சந்தித்து அந்த வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்தோம். அந்த மனு திருப்பிப் பார்க்கப்படாமல் கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. அந்தக் கோரிக்கையை மீண்டும் மூன்று தினங்களுக்கு முன்னர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் அளித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு சீக்கிரம் அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து, பாதிக்கப்பட்ட வேலையை எதிர்பார்த்திருந்த அந்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் என்று நானேகூட எதிர்பார்க்கவில்லை. அந்த வகையில் மூன்று நாட்களிலே அந்த 394 வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் இன்று பணி நியமன ஆணையை வழங்கியிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் (மார்க்சிஸ்ட்) சார்பாகவும், அந்த 394 குடும்பங்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த பாராட்டுகளை, நன்றியோடு தெரிவித்து அமைகிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரம் மிகுந்த மனமே! ஈகை நிறைந்த குணமே! வீரம் மிகுந்த செயலிலே, வெற்றிகள் குவித்த கரமே! சோதனைகளை வென்று சாதனைகளைப் படைத்து வரும் வரலாறுக்கு வரலாறு